உ

முருகன் றுணை.

சைவசமய பரமாசாரிய சுவாமிகளாகிய

# திருஞானசம்பந்தசுவாமிகள்

# சிந்து.

மதுரை காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,

மகா-௱-௱-ஸ்ரீ சுப்பராம ஐயரவர்கள் மாணுக்கரும்,

திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனவித்வானும்

ஸெயிண்டுமேரி ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமான

**மு. கோவிந்தசாமி ஐயரால்**

இயற்றப்பெற்று,

---

ஷெடியாரால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப் பெற்றது.

---

**1914.**

விலை] [அணா 2.

OFFICE OF THE REGISTRAR ... JAN 19.. MADRAS
109
169
114
023:47x4 N14 121668.

உ

முருகன் துணை.

சைவசமய பரமாசாரிய சுவாமிகளாகிய

# திருஞானசம்பந்தசுவாமிகள்

# சிந்து.

மதுரை காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,

மகா-௱-௱-ஸ்ரீ சுப்பராம ஐயரவர்கள் மாணுக்கரும்,

திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனவித்வானும்

ஸெயிண்டுமேரி ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதருமான

## மு. கோவிந்தசாமி ஐயரால்

இயற்றப்பெற்று,

ஷையாரால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1914.

விலை] [அணு 2.

உ

திருச்சிற்றம்பலம்

# முகவுரை.

புண்ணியநதியாகிய கங்கையும் தனது பாவங்களைப் போக்குமாறு கருதியிங்கேவந்து மூழ்கிச்செல்லுதலால் அதினும் சிறந்ததென்று ஆன்ருேர் புகழும் பெரும்புண்ணிய நதியாகிய காவிரிசூழ்ந்த சோழநாட்டின்கண் பிரம்புரமுதலிய பன்னிரண்டு திருநாமங்களைப் பெற்ற சீகாழியில் அறுமுகப்பெருமான் அருளுருவாக அவதரித்த ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் குழந்தைப்பருவத்தில் நீராடச்சென்ற தந்தையாரோடு தாமுஞ்சென்று பிரமதீர்த்தக்கரையில் அழுதுநிற்கையில் பரமகருணாநிதியாகிய சிவபெருமான் உமாதேவியோடு ரிஷபாரூடராகவெழுந்தருளி அம்மையை நோக்கி "இக்குழந்தைக்குப் பால்கறந்தூட்டுக" என ஆணைசெய்ய அங்ஙனமே உலகமாதாவாகிய அம்பிகைபொற்கிண்ணத்தில் பால் கறந்தூட்ட அவ்விருவராலும் ஆளப்பெற்றமையால் ஆளுடையபிள்ளையார் என்னும் திருநாமம் பெற்று எல்லாக்கலைகளையும் ஓதாதுணர்ந்து தமிழ்வேதமாகிய தேவாரத்தைபாடிச் சிவதலங்கடோறுஞ்சென்று பற்பல அற்புதங்களைச்செய்துவருவாராயினர்.

அக்காலத்தில் கூன்பாண்டியன் சமணர்களால் ஏமாற்றப்பட்டு அம்மதப்பற்றுடையானுகி வருதலைக்கண்டு அவ்வரசன் பத்தினியாகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாகிய குலச்சிறையாரும் மனங்கவன்று மன்னவன் மனத்தைச் செந்நெறிப்படுத்தக்கருதி ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகட்கு விண்ணப்பஞ் செய்ய அவர் வேண்டுகோட்கிசைந்து இம்மதுரைப்பதிக் கெழுந்தருளி இவ்வாகீசமடத்திற்றங்கி ஸ்ரீசோமசுந்தரக்கடவுள் திருவருளால் சமணர்களைவாதில்வென்று சமணர்மதத்தையோட்டிச் சைவந்தழைத் தோங்கச்செய்து திரும்புங்கால் சுவாமிகள் தங்கியிருந்த இம்மடாலயத்தில் அப்போதுவசித்த அதிதீவிரபக்குவராகிய ஸ்ரீவாகீசமுனிவருக்குச் சுத்தாத்துவித சைவசித்தாந்த ஞானுபதேசஞ் செய்தருளி பாண்டியராஜன் தமக்

குச்சமர்ப்பித்த சகல பொருள்களையும் முநிவருக்குக்கொடுத்து இங்குள்ள பரிபாகமுடைய ஆன்மாக்களுக்குச் சைவசித்தாந்த ஞானுபதேசஞ்செய்து "சைவமதத்தை வளர்த்துவரக் கடவீ" ரென்று கட்டளையிட்டு அகன்றனர். இதனுல் வாகீசர்மடம் "ஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம்" எனப்பெயர் விளங்குவதாயிற்று.

ஆளுடைய பிள்ளையார் அருளியவாறே அற்றைநாள்முதல் இற்றைநாள்வரை வாகீச முனிவர்முதல் ஒருவர்பின்ஒருவராக ஞானேபதேசஞ்செய்து சைவத்தைவளர்த்து வந்த சற்குருமூர்த்திகள் இருநூற்றெண்பத்தொன்பதின்மராவர். இப்பொழுதுஎழுந்தருளியிருக்கும் மகாசன்னிதானமாகிய ஸ்ரீமத் சுவாமிநாததேசிகசுவாமிகள் இருநூற்றுத்தொண்ணூருவது குருமூர்த்திகளேயாம்.

இந்த மஹாசன்னிதானத்தின் பரிபாலனத்துட்பட்ட வித்துவான்களுள் ஒருவரும் தமிழிலக்கியஇலக்கணநூல்களை முறையாகக்கற்றவரும் செய்யுளியற்றுந் திறமை நன்குபெற்றவருமாகிய ப்ரும்ம ஸ்ரீமு. கோவிந்தசாமி அய்யரவர்கள் இவ்வாதீனத்தின்மீதுதமக்குள்ள உண்மையன்பிற்குஅறிகுறியாக ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரத்தைக்கற்ருரேயன்றி மற்ருரும் எளிதுணர்ந்துய்யுமாறு சிந்து என்னும்சந்தக்கவிகளிலமைத்துப்பாடிவந்து பலவித்துவான்கள் குழுமியிருக்க மஹாசந்நிதானத்தின்றிருமுன்னர் அரங்கேற்றினூர்கள்.

சிந்து என்பது பல்லவி அநுபல்லவி மூன்று சரணங்கள் என்னும் ஐந்துறுப்புக்களால் அமைந்த இசைத்தமிழ்யாப்புவிசேடமாம். ஆயினும் இப்பெயரைவகித்துப் பல்லவி அனுபல்லவியன்றி சரணங்கட்குரிய கண்ணிகளை மாத்திரமேகொண்டு வழங்குவன சிலவகைச்சிந்துகள். இவை ஆக்குவோனுள்ளக் கருத்தின்படியே அமைக்கப்பெறுவனவாகி கும்மி, குறம், வழிநடைப்பதம் எனப்பலதிறப்பட்டு வழங்குவனவாயின.

ஐயரவர்கள் இயற்றிய ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரச்சிந்து. 112. கண்ணிகளை யுடையனவாகிப் பெரியபுராணத்துட்கூறப்பட்டசுவாமிகள் சரித்திரசாரம் முழுதும் எல்லாரும் எளிதுணர்ந்துகொள்ளுமாறு தெள்ளியநடையில் சொன்னயமும் பொருணயமும் பொருந்தவும், பக்திரசம்பழுக்கொழுகவும் கேட்டோர் மனத்தைப்

பிணிக்கதக்கவாறு அமைந்திருத்தலால் அரங்கேற்றவையிலுடனிருந்த வித்துவான்கள் மிகப்பாராட்டிச் சாற்றுக்கவிகளிசைத்தனர்.

ஸ்ரீலஸ்ரீ மஹாசன்னிதானமும் திருவுளத்திற் பெருமகிழ்ச்சி கொண்டு இதனை அச்சியற்றும் வண்ணம் திருவாய்மலர்ந் தருளியதுடன் இதற்கோர் முகவுரை வரைந்து தரும்படி எளியேனுக்கு ஆணை தந்தருளியது. ஐயரவர்கள் கவித்துவசக்தி நிரம்பியவர்களென்பது யான் கூறவேண்டுவதின்று. இந்நூலைப்படிப்பவர்கள் தாமே நன்கறிவர்.

இந்நூலாசிரியரும், அந்தணர்குலதிலகரும், நற்குணசீலரும், ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிள் ஆதீனவித்துவானும், மதுரை செயிண்ட் மேரிஇஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் ஆகியஸ்ரீமு. கோவிந்தசாமிஅய்யரவர்கள் சகலைச்வர்ய சம்பன்னராகப் பல்லாண்டு வாழ்ந்து இன்னும்பற்பல நூல்களை யியற்றியுலகை மகிழ்வித்து வாழும்வண்ணம்எனதுபரமாச்சாரிய மூர்த்தியாகிய ஸ்ரீஞானசம்பந்தப்பெருமான்றிருவடிமலர்களைச்சிந்தித்து வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்.

சுப்பிரமணியபிள்ளை,

ஸ்ரீஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனவித்துவான்,

தெற்காவணிமூலவீதி, மதுரை.

பிரமாதீச ௵ மார்கழி ௴ ௧௨

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

மதுரை ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவரர் தேவாலயம் அர்ச்சகர் பிர்ம்மஸ்ரீ

## கல்யாணசுந்தரபட்டரவர்கள் இயற்றியது.

𑌶𑍍𑌰𑍀𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌮𑌹𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌮𑍍.

𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌭𑌵𑌾𑌵𑌕𑌾𑌨𑍍, 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌾𑌮𑌿 𑌕𑌵𑌿𑌰𑌾𑌟𑍍

𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌮𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌸𑌂𑌸𑍍𑌤𑍁𑌤 𑌤𑍇𑌜 𑌰𑌾𑌶𑌿𑌶𑍍𑌰𑍀𑌤𑌪𑍋𑌧𑌨𑍈𑌃.

மதுரை திருஞான சம்பந்தசுவாமிகளாதீனம்

ஸ்ரீ சேதுசமஸ்தானம், மதுரைத் தமிழ்ச்சங்கம்

சம்ஸ்கிருத வித்துவான் பிர்ம்மஸ்ரீ

## அகிலாண்ட சாஸ்திரிகள் இயற்றியது.

𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌮𑌾𑌕𑍍𑌷𑍀𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌦𑍇𑌶𑌮𑌹𑌿𑌤𑌜𑌨𑌿𑌕𑍃𑌤𑍇𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌬𑌨𑍍𑌧
[illegible]
𑌸𑍂𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍍॥

𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌾𑌥𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌭𑌵𑌮𑌾𑌕𑌵𑌿 𑌨𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌾𑌯𑍇𑌸𑌿𑌤𑍇𑌨
[illegible]॥

மதுரை வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ

## சுந்தரேசுவரய்யரவர்கள் இயற்றியது.

திருமதுரைத் திருஞான சம்பந்த ராதீனஞ் சிறப்ப மேவுங்
கருணைமலி தருசாமி நாதகுரு வுளமுவப்பக் காழி வள்ளல்
அருமைபெறு சரித்திரநற் சிந்தையுறச் சிந்தாக வாக்கி னனக்
குருமணிபா லுறுபுலவன் கோவிந்த சாமிமறைக் குலமே லோனே.

நூலாசிரியர் மாமா பிள்ளையார்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ

## நாராயணசாமி ஐயரவர்கள் சொல்லியவை.

திருமலியுங் காழிநகர்க் கவுணியர்கள் மரபுதித்துத் தேவி யீந்த, பெருமுலைபி னமுதருந்தித் தென்றமிழின் மறைவிரித்துப் பேயரான, அருகர்களை வென்றவரைக் கழுவேற்றி மன்னவன்கூ னகற்றிச் சைவ, தருவளரச் செய்தவெங்கள் திருஞான சம்பந்த சாமி காதை.

சிந்துவிலும் பரந்திருக்கு மதைச்சுருக்கி யாவருக்குந் தெரியும் வண்ணஞ், சந்தமுறு சிந்தியலிற் சொல்லினிமை பொருளினிமை தழைக்கச் சொன்னான், செந்தமிழிற் பன்னூலு மையமறக் கற்றுணர்ந்து தேனுங் கைக்கச், சுந்தரமாக் கவியுரைக்குங் கோவிந்த சாமி யெனுஞ் சுருதி யோனே.

---

நூலாசிரியர் ஆசிரியரும், மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமான

## மகா-ா-ா-ஸ்ரீ B. B. சுப்பராம ஐயரவர்கள் சொல்லியன.

அப்பணி சடையான் றேவி யருளிய ஞானப் பாலைத்
திப்பிய மாக வுண்டு செந்தமிழ் மறையை யீந்து
கைப்புடைச் சமணை வென்று கவுரியன் சுரத்தைத் தீர்த்த
வொப்பிலாக் காழி வள்ள லுயர்புகழ்க் காதை தன்னை.

சந்தத மொளிரு ஞான சம்பந்தர் மடத்து வித்வான்
முந்துகோ விந்த சாமி முழுதையு முறையாக் கோத்துச்
சிந்தெனும் யாப்பிற் செப்பிச் சிறப்புட னளிக்க வேசம்
யந்தரு மச்சி லேற்றிப் பாரினிற் பரப்பி னரே.

---

சோழவந்தான் வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ

## அ. சண்முகம்பிள்ளையவர்கள் சொல்லியன.

---

சாதன முற்று மாட்சிய ரொடுதற் சார்பிறர் தாமுநற் சரியை
யோதிய கிரியை யோகமு ஞானத் தொளிர்பிற மார்க்கமு மின்றிச்
சேதன வடிவா யெளிதினி லரிய சிறப்பெனும் வீடுற நல்லூர்ச்
சோதியிற் கலந்த ஞானசம் பந்தன் றூயவான் சரிதமா மமிர்தம். (1)

மாதிருத் தொண்டர் புராணசா கரத்துண் மதிமலே கொடு கடைந் தெடுத்துக், காதினுக் கினிய பல்வகைச் சந்தங் கவினிய சிந் தெனும் பாவா, லோதுக வெனவப் பிள்ளையார் மரபி னுயர்மது ராபுரி மடத்தின், மாதவச் சாமி நாததே சிகஞர் வாய்மலர்ந் திசை ப்பவுண் மகிழ்ந்தே. (2)

கலைபறி வுலக வறிவுடன் பெற்றுக் காவலர் மொழியொடு தமிழா, நிலையுடைச் சலதி நீந்திய புண னீதியு மொழுக்கமு நிரம்பு, மலைவிலாக் குணத்தான் முத்துச்சுப் பய்யன் மாதவத் துதித்தநன் மைந்த, னலைவிலா வுளத்துக் கோவிந்த சாமி யாரியன் பாடினன் மன்னே. (3)

---

மதுரை வித்தியாபா நுப் பத்திராதிபர் மகா-ள-ள-ஸ்ரீ

## மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் சொல்லியன.

பலசமயத் தாறுகளுந் தனையடையப் பயோததியாப் பரவியீசன்
அலகிலுயிர் பாசம்வியா பகவியாப் பியவ்யாப்தி யமைவின் மன்னி
மலமகல வுப்புமப்பு மருவுநிலை பசுபதியை மன்னு முத்தி
நிலையெனக்கொள்சைவமதாசாரியருட்டலைமைகொண்டநிமலமூர்த்தி.

பிரமபுரத் தவதரித்த திருஞான சம்பந்தப் பிள்ளை யார்தந்
திருமருவு சரிதமொரு சிந்தாகு மென்பரத சிந்தே யாகி
வரமதுரைத் திருஞான சம்பந்த ராதீனம் வாழும் வித்வான்
உரமலியுங்கல்வியறிவூகமின்சொல்நட்புரிமையொருங்குவாய்ந்தோன்.

அத்தமலி பன்னூலு முந்நூலு மகம்புறங்கொண் டவிரும் வேத
வித்தகனுங் கோவிந்த சாமிவல்லோன் செய லுணர்ந்து விமல ஞான
முத்தமிழா கரன்ஞான சம்பந்த ராதீன முதல்வ னெங்கள்
சித்தமல மறுத்தாள வருசாமி நாதவருட் செல்வ வள்ளல். (3)

எல்லவர்சிந் தையுந்தன்னுள் ளடங்கவரு மிச்சிந்தை யெவரு மோர்ந்து, நல்லகதி யடையவெழு தாவெழுத்தி விட்டெவரு நவிலச் செய்தான், சொல்லினிமை பொருளினிமை தொடையினிமை யிசை யினிமை தோன்று மிந்நூல்,வல்லதமிழ்ப் புலவருக்கு மருந்தென்கோ விருந்தென்கோ வமுத்துங் காலே. (4)

மகிபாலன்பட்டி வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ

## மு. கதிரேசச்செட்டியாரவர்கள் இயற்றியவை.

திருஞான சம்பந்தப் பெருமான்ற னருட்சரிதந் தெளிந்தெல் லோரும், பெருஞானம் பெற்றின்பச் சிந்திடைமூழ் குறச்சிந்தாற் பேசு கென்னத், தருஞான சம்பந்த பரம்பரையின் மதுரையொளிர் சாமி நாத, குருஞானப் பெருஞ்செல்வ னுளமுவந்து கூறியசொற் குறிப்பிற் கொண்டே. (1)

தேன்மணக்கு மிசைநயமுந் தெருண்மணக்கும் பொருணய முஞ் செய்ய வாய, பான்மணக்குஞ் சொன்னயமும் படிப்பவர்கேட் பவர்மணக்கப் பாடித் தந்தான், வான்மணக்குஞ் செழுந்தமிழு மன்மணக்கு மாங்கிலமு மரபிற் கற்றோன், நூன்மணக்கு முயர்குலத் தான் கோவிந்த சாமியென நுவல்மே லோனே. (2)

---

நூலாசிரியர் மாணுக்கர் பார்த்திபனூர் மகா-ா-ா-ஸ்ரீ

## P. M. சண்முகஞ் செட்டியாரவர்கள் இயற்றியவை.

திருவுலகிற் றிகழமுதம் பலவதனு ளறங்குறையத் தீமை யோங்க, மருவியகங் களைந்தறனை வளர்க்கவவ்வம் மதத்தாரும் வணங்கிப் போற்றக், குரவர்பல ரவதரிப்பா ரெனுங்கொள்கைக் கொருசான்றாய்க் கொள்சீர் காழித், திருமறையோர் சரிதமதைத் தெளிவான தமிழ்நடையிற் சிந்தாய்ப் பாடி.

இந்நிலத்திற் கற்றவரு மற்றவரு மினிதோத வெளிதாம் வண் ணஞ், சொன்னயமும் பொருணயமுந் தொடைநயமு மிசைநயமுந் தோன்றத் தந்தான், தென்மொழியு மாங்கிலமுஞ் சிறக்கவவை யிசைமொழியன் றேர்ச்சிமிக்க, நன்கவிஞன் மாமதுரைக் கோவி ந்த சாமிமற்றை நவிலு வோனே.

---

சாற்றுக்கவிகள் முற்றும்.

உ

முருகன் துணை.

# ஸ்ரீ ஞான சம்பந்தஸ்வாமிகள் சிந்து.

(பாளைவாய் கமுகில் வந்தூர் என்ற சந்தம்.)

சீருயர்ந்த காழிவந்து பேருபர்ந்த மாமறையைத்
தென்சொலாலே செப்பினரின் சிந்துமே—பானும்
நன்சொலாலே சொல்லவருள் தந்துமே. (1)

காரெனவே கவுண்மதமா நீரின்வெள்ளங் கழியவார்க்குங்
கற்பகவைங் கரனம்மைக் காக்குமே—நல்ல
சொற்பொருளுந் தோன்றவழ காக்குமே. (2)

மஞ்சளிஞ்சி வாழைசாலி விஞ்சவெங்கு மலிந்திருக்கும்
வளமனைத்தும் வாய்ந்தநல்ல தேசமாம்—அது
அளவிறந்த வன்பர்களின் வாசமாம். (3)

பஞ்சரத்துப் பைங்கிளிக்குச் செஞ்சொன்மொழித் தெரிவையர்கள்
பண்முறையைப் பயிற்றுவிக்கு நாடுமாம்—மறை
யுண்மையுணர்ந் தோர்களுறை வீடுமாம். (4)

கங்கையென்னுந் துங்கங்கொண்ட மங்கைலோபாமுத்ரையென்னுங்
காவிரியின் கால்பரவு மெங்குமே—சொலிற்
பாவிரியும் பண்புடன்வி ளங்குமே. (5)

துங்கர்வாழும் பெருமைசான்ற புங்கமார்ந்த நாட்டினுமம்
சோழநாடாய்ச் சொல்லுவார்கள் மேலோர்—அதை
வாழமேலாய் வாழ்த்துவார்கள் நூலோர். (6)

அந்தநல்ல நாடதனின் முந்தியதாய்ச் சண்பையாதி
யாறிரண்டா யானபெயர் பூண்டுமே—நினை
பேறளிக்கு நகருமுண்டு யாண்டுமே. (7)

பைந்தொடியோர் பங்குடையார் சுந்தரப்பேர் தோணியப்பர்
பத்தர்களைப் பரிந்தவருங் காப்பரே—அவர்
சித்தமல நீக்கியிடர் தீர்ப்பரே. (8)

கண்ணுதலே கடவுளாமென் றெண்ணியேயன் பேய்ந்துவாழுங்
கவுணியர்கள் கால்வழியே வந்தவர்—இந்த
அவனியுள்ள வேதியர்க்கு யர்ந்தவர். (9)

புண்ணியமோ ருருவெடுத்து மண்ணின்மிசை வந்ததென்னப்
போற்றநின்ற புத்தமுதை நேர்ந்தவர்—அவர்
சாற்றரிய தவத்துறையிற் றேர்ந்தவர். (10)

சிவபாத விருதயரா யவரையாரு மழைக்கலானர்
சிறுவரில்லா தேக்கமுற்று வாடியே—மனம்
மறுகவீசன் மகவளித்தா னுடியே. (11)

அவமறுக்க வாதிரையிற் றவம்பெருக்கத் தானுதித்தார்
அம்புயத்தி னக்குழவி போலவே—இந்த
அம்புவியி லவர்வளர்ந்தார் சாலவே. (12)

மூன்றுவய தாகுமெல்லை யீன்றதந்தை நீர்படிய
முன்னியேக முன்னவரு மோடினர்—தந்தை
பின்னடந்தார் பேரருளை நாடினர். (13)

ஆன்றவந்த மதலைதன்னைச் சான்றநீரின் கரையில்வைத்தே
யந்தணர்நீ ராடடவே போயினர்—பிள்ளை
முந்தைநினை வோடழுதல் மேயினர். (14)

மேலையெண்ண மூண்டதாலோ வேனும்பிள்ளைத் தன்மையாலோ
விம்மிவிம்மி யிருகணீர்து ளித்தனர்—என்றன்
அம்மையப்பா வென்னவேவி ளித்தனர். (15)

கோலமுற்றுந் தோணியப்பர் சீலமுள்ள சிகரநோக்கிக்
குழந்தைநின்றே யழுதரற்றக் கண்டனன்—அரன்
மழவிடைமே லுமையுடனே கொண்டனன். (16)

பங்கமர்ந்த பார்வதியைச் சங்கரனூர் நோக்கிமுலைப்
பாலைவள்ளத் தேயளிக்கச் செப்பினூர்—உடன்
நூலையொத்த விடையினுளு மொப்பினுள். (17)

செங்கமலத் தயற்குமாற்கும் புங்கவர்க்கு மெட்டிடாத
சிவஞானத் தோடுபாலை யூட்டினுள்—அவர்
உவகையோடு முண்டுகளி யீட்டினூர். (18)

பிள்ளையாரை யம்மையப்பர் வள்ளப்பாலா லாண்டதாலே
பேசினூர்க ளாளுடைய பிள்ளையாய்—ஞான
தேசிகனு யாக்கினுணம் கிள்ளையாள். (19)

தெள்ளுசிவ ஞானத்தோடே யுள்ளசம்பந் தத்தினுலை
திருஞான சம்பந்த மூர்த்தியாம்—இந்தத்
தரணியெங்கும் பரவுமவர் கீர்த்தியாம். (20)

---

(என்னடி நான்பெற்ற மங்கை என்ற சந்தம்.)

தந்தையு நீராடிவந்து கண்சி வந்து மனம்நொந்து—சிறு
தனையர்முன் பாகவி ருந்து—கோபத்
தழன்மீறிட வெவர்பாலிது சொலுவாயென வுரையோதினர்
தடியொன்றைக் கைதனிற் கொண்டு—மிகத்
தவறென வேசலிப் புண்டு. (21)

கந்தன் வடிவெனும் பாலர் அனுகூலர் அருட் சீலர்—உயர்
ககன மார்ந்தருள் சூலர்—எனக்
கனிவாகிய கவியானதில் முதலோமுற விசையேழுடன்
கழறினூர் கைவிர னீட்டி—மறைக்
கண்ணமர் பொருளையுங் கூட்டி. (22)

தோடுடை யசெவி யென்னும் அருள் துன்னும் பொருள் மன்னும்-பாரில்
துலங்கி வருமது வின்னும்—இந்தத்
தொடையானது பெருமானிரு செவியேறிட நனியோதினர்
தோத்திரித் தார்முதற் காதை—அவர்
சூட்டிய தோர்ந்திலர் தாதை. (23)

பீடி துவானதின் பின்றை மலர்க் கொன்றை யரன்மன்றைச்—சேரப்
பின்னவ ரேகினர் நன்றே—யங்கு
பெரியோர்களு மறையோர்களு மகிழ்வோடட னணலாயினர்
பேரருள் கண்டக மஞ்சிச்—சிறு
பிள்ளையார் தம்மையே கொஞ்சி. (24)

வானவர் யாவருங் கூடி யிசை பாடி யருள் நாடி—நறு
மாமலர் தூவினர் தேடி—தோணி
வளர்நாதனி னருளேகொடு சிறுபாலரு மகமேகினர்
வண்டமிழ் மாலையுஞ் சாத்தி—அவர்
மாமலர்த் தாளிணை யேத்தி. (25)

ஞானமே யோருருக் கொண்டார் தமிழ்வண்டார் உரைவிண்டார்-மறு
நாட்கோலக் காவினைக் கண்டார்—சுர
நபமோடிவர் கவிபாடிட விருதாளமு முறலாயது
நம்பனின் செயலென வெண்ணி—அவர்
நாடினர் காழியை நண்ணி. (26)

அங்குமே நாள்சில வுற்றார் அருள் பெற்றார் இனு மற்றும்—தலம்
அடைந்திட வேமனம் பற்று—நின்றே
அனையார்பக வதியார்பதி செலலாயின ருமைநாதனை
அன்புட னேகண்டு வாழ்த்திச்—சில
ஆரமுந் தென்சொலாற் சாத்தி. (27)

எங்குமிச் சேதிபோய்ச் சேரக் களி யாரப் பரி வார—முடன்
யாவரும் வந்தனர் சார—பின்னர்
இசையாழினில் வலபாணரு மவர்பாடலை யுறவீணையி
விசைத்தன ரன்புடன் பாடி—அவர்
இன்சொலைக் கண்டுகொண் டாடி. (28)

பூமிக்குச் சுழிமுனை நாடித் தலம் நாடி கவி பாடி—பல
பூசுரர் தம்மொடுங் கூடி—பாரின்
பொடியானதில் பதமாமலர் நவிவாயசத் துறையானதைப்
புண்ணியர் சேர்ந்தனர் சென்று—குளிர்
புணரியில் வீழ்ந்தன னென்று. (29)

சாமிக்கு மனம்பொறுக் காது தரை மீது நட வாது—வரத்
தந்தனர் சிவிகையப் போது—இன்னும்
சத்ரமாதிய முத்தினல்தர வத்தனர்செயல் மெத்தவேயெணிச்
சந்ததம் பணிந்தவை பெற்றார்—அரன்
தாளிணை துதித்ததி லுற்றார். (30)

---

(சந்தவரை வந்தகுக என்ற சந்தம்.)

ஆந்தலமுஞ் சென்றுதமிழ் மாலை—பல
வேய்ந்தவருங் காழியடை வேலை—முறை
யாரணியர் சாத்தினர்முந் நூலை
முத னூலை ஞானப் பாலை—வாங்கி
யன்றருந்து வார்க்களித்தார் மேலை. (31)

ஏந்துமவர் சங்கையெலா நூக்கி—மறை
வாய்ந்தபொரு ளுண்மைவெளி யாக்கி—ஆதி
யைந்தெழுத்தின் சீரைநனி தூக்கிக்
கவியாக்கி யிரு ணீக்கிப்—பின
ரேகினரே சேத்திரமு நோக்கி. (32)

இந்தவித மேதலங்கள் போந்தார்—அவர்
இன்றமிழில் மாலைபல வேய்ந்தார்—வள
மேந்துதுறை சைப்பதியைச் சேர்ந்தார்
களி கூர்ந்தார் அவண் வாழ்ந்தார்—பிதா
யாகமதைச் செய்யுமன மோர்ந்தார். (33)

வந்துபிள்ளை யாரிடமே சொற்றார்—இதைச்
சிந்தையெணி யார்வமிக வுற்றார்—உடன்
மாசில்மணி யாரிடமே துற்றார்
தனம் வற்றாக் கிழி பெற்றார்—மறை
வண்டமிழை யேயுரைக்கக் கற்றார். (34)

சேருமடி யார்பலரைக் கூட்டிப்—பல
சேத்திரங்கள் யாவையுமே காட்டிப்—பின்னர்
சேர்ந்தனர்கள் மாமருகல் மாட்டில்
விஷ மோட்டி மண மூட்டிப்—பின்னும்
சென்றடைந்தார் மாமுருகர் வீட்டில். (35)

காருவரி நீத்தவப்ப மூர்த்தி—வரக்
கண்டடைந்தார் மாமிழலை யேத்தித்—தரை
காய்ந்ததனு லாக்கமெங்கு நாத்தி
முருகாத்தி முடி சாத்தி—யான
கண்ணுதலை வேண்டினர்கள் வாழ்த்தி. (36)

கண்ணுதலுங் காசளித்தார் வேண்டி—அதைக்
கண்டடியா ரோடுகளி தூண்டி—மறைக்
காடடைந்தார் யாவையுமே தாண்டி
முனை யாண்டில் மறை தீண்டி—யிட்ட
காப்பதனைக் கண்டனர்க ளீண்டி. (37)

பண்ணுறவே பாடியதைப் போக்கச்—சிறு
பாலரவ ரப்பரையே கேட்க—அவர்
பாடியுமே பெற்றிலது நீக்கம்
அருணைக்க மில தாக்கு—மெனப்
பாடினரே வேறுசில பாக்கள். (38)

பின்னரது நீங்கவிவர் போனார்—உறை
பிஞ்ஞகனைக் கண்டுமகிழ் வானார்—இரு
பேர்களுமே பாவுரைத்தார் தேனு
அது மேனு ளெனத் தானு—அடை
பெற்றியுறப் பாடினர்சே யரினர். (39)

இன்னணமே யாங்குசில நாளும்—நனி
எய்தினர்க ளோதியரன் றாளும்—வள
மேப்ந்ததிருப் பாண்டிநக ராளும்
முறை கேளும் தரை நீளும்—செப்ப
மின்றமிழை யீந்தருளும் வேளும். (40)

பாயுடையும் பீலியுங்கை தாங்கிப்—புழு
வாயுடைய வெஞ்சமண ரோங்கி—வரப்
பாண்டியனும் மெய்வழியி னீங்கி
யவர் பாங்கில் மன மூங்கி—யுறப்
பத்தினியு மந்திரியு மேங்கி. (41)

தூயவழி யேயிருந்தார் வேட்டுப்—பின்னர்
சொற்பயிலும் பிள்ளைசெயல் கேட்டுச்—சில
தூதரையும் போக்கினரங் நாட்டு
மறை காட்டு முறை நாட்டு—ஞான
சூரியரைப் போயடைந்தார் தேட்டு. (42)

---

(தெள்ளுதமி ழுக்குதவு சீலன் என்ற சந்தம்.)

தெள்ளுசிவ ஞானமுறுந் தேவா—மறைச்
செந்தமிழை யோதியநன் ஞுவா—முத்துச்
சிவிகை யுடனேமற்றுங் கவிகை தனையும்பெற்ற
சீரா வருள் கூராய். (43)

விள்ளரிய தாளமுறுங் கையா—முழு
வெண்ணிறத்த நீறணியு மெய்யா—எங்கள்
விழுமை யார்ந்ததிரு வழுதி சார்ந்தநிலை
விட்டான் மதி கெட்டான். (44)

வீதிகளின் மாமறையின் கீதம்—இலை
வெஞ்சமணர் செய்திடுவர் வாதம்—இனும்
வேட்ட லாதிவினை நாட்டி லேதுமிலை
வேலா வனு கூலா. (45)

பூதிமணி சாதனங்கள் தள்ளி—அவன்
புன்சமணர்க் கேபுரிந்தான் பள்ளி—சிவ
பூசை யேதுமிலை நாச மாயினது
போதா வருள் நாதா. (46)

என்றிடவு மேகமனக் கொண்டார்—உமை
யீந்தமுலைப் பாலமுதை யுண்டார்—இதை
இருந்த வப்பரிடம் பொருந்தச் செப்புதலும்
ஈதும் அரசோதும். (47)

நன்றலரீ ராங்கடைத லைய—அவர்
ஞாய்வழி சென்றிடாத பொய்யர்—அன்றி
நாளும் திருத்தமில்லை கோளும் பொருத்தமில்லை
நண்ணீ ரிதை யெண்ணீர். (48)

சங்கரனார் சிந்தைகுடி கொண்டார்—இனிச்
சத்துருக்கள் துன்பநமக் குண்டா—எனத்
தாளை யோதிநவ கோளை வெல்பதிகம்
தந்தார் காழி வந்தார். (49)

அங்கமுற நீறதனைச் சாத்தி—மறை
யாரணியர் தாளிணைக ளேத்தி—அவர்
ஆதி யைந்தெழுத்தை யோதி வந்தடுத்தார்
ஆடல் உறுங் கூடல். (50)

வெஞ்சமணர் தீக்கனவு கண்டார்—அவர்
வேர்த்துமிகச் சிந்தையிடி யுண்டார்—முகம்
மெத்த வாடினர்க ளொத்துக் கூடினர்கள்
விரைந்து மனங் கரைந்து. (51)

தஞ்சமுத லாங்கருவி மோத—முகிழ்
கையினர்க ளோமரவென் றோத—முத்துக்
கவிகை நிழல்பரப்ப வடியர் பெருக்கமொடு
கலந்து முக மலர்ந்து. (52)

பாலர்வர மந்திரிமுன் போந்து—தரைப்
பற்றெழிந்த மாமரம்போல் விழ்ந்து—மிகப்
பரவி யேத்திடலும் பரமர் தூக்கியிவை
பகர்வார் குக னிகர்வார். (53)

சிலமுறு மாசிபல விண்டார்—மதிச்
செஞ்சடையார் கோயிலெதிர் கண்டார்—உடன்
செங்கை குவித்திறைஞ்சி மங்கை யெனும்பதிகம்
தெரித்தார் பணி விரித்தார். (54)

---

(சென்னிகுளநகர் வாசன் என்ற சந்தம்.)

மின்னு மணிமுடிக் கோயில்—வல
மேவியே வந்தனர் வாயில்—அங்கு
விரைமேவிய குழலாளவள் பணிவோடொரு புறமேயுற
விழைந்தார் மனங் குழைந்தார். (55)

மன்னுவா கீசருந் தங்கு—மடம்
மந்திரி காட்டிட வங்கு—வரும்
மறையோரொடு பரிவாரமு முடனேவர வருணதரும்
வசித்தா ருண்டி புசித்தார். (56)

பிள்ளையார் தம்மையே கண்டு—சமண்
பேயர்க ளச்சமும் கொண்டு—மன்னர்
பெருமானிட மடமீதிலே கனன்மோதிட விடுவேமெனப்
பேச மனங் கூச. (57)

கள்ளரின் சொற்கொடு மன்ன—னிதைக்
கடுகவே செய்திடு மென்ன—அவர்
கனலேகொடு குருநாதரின் மடமீதிட வடியார்சிலர்
கண்டார் வெருக் கொண்டார். (58)

பாண்டியன் றேவியைக் காக்க—அதைப்
பையவே வேந்திடம் போக்க—அவர்
பத்துக்கவி நத்திச்சொல மெத்தச்சுர முற்றித்துயர்ப்
பட்டான் முறை கெட்டான். (59)

ஆண்டகை யார்மடத் தேதும்—கனல்
ஆற்றிட நீத்ததப் போதும்—அரன்
அடிமாமலர் தினமோதிய வடியார்துய ருறுவார்களோ
ஐயா இது பொய்யா. (60)

வேந்தனும் நொந்தனன் வாடி—அதை
வீணுரு நீக்கவே கூடி—வந்து
வியப்பேயொடு மயிற்பீலிக ளெடுத்தேயுடல் தொடத்தானவை
வெந்த பொரி சிந்த. (61)

ஏந்திய குண்டிகை நீரைத்—தெளித்
தேத்தினர் நான்முக னுரை—அது
எரிவார்நெயின் மிகவீசிட மனநோவக மெலிவாயின
னேங்க வன லோங்க. (62)

(பாதி ராத்திரி வேளையில் என்ற சந்தம்.)

பாவை பார்த்திதை நாயகன் மஞ்சப்
பக்கத்தில் வந்து நின்று—படு
பாவிகள் செய லென்று—சிறு
பாலரைத் தொழி னின்று—சுரம்
பட்டுப் போயிடுங் கர்த்தனே யெனப்
பகர்ந்தனள் மதி நன்று. (63)

ஆவி போகுதே யய்யய்யோ வந்த
ஐயரைக் கொண்டு வாரும்—இந்த
வாரமுற் சுரந் தீரும்—மதி
யமைச்சரேயுட னீரும்—முன்னர்
அம்மை யார்முலைப் பால் பருகிய
அண்ணலைக் கொண்டு சேரும். (64)

என்று கூறிட நாயனு ரிடம்
ஏகி யேயிவை சொன்னார்—அவர்
இறைய னுர்திரு முன்னு—இது

ஏற்கு மாவுமக் கென்னு—மிக
இனிமையார் தமிழ்ப் பதிகமே சொலி
எய்தினர் குக னன்னர். (65)

வென்றி வேற்கர வேந்துபால் மந்த்ரி
வேக மாயோடிப் போந்து—தங்கள்
வெந்துய ரெலாந் தீர்ந்து—சுகம்
மேவிட வரு ளீந்து—காக்க
வேண்டியே பிள்ளை யாரு மேயினர்
வேந்தரே யென்றூர் தாழ்ந்து. (66)

ஞான போனகர் மீனன் கோயிலை
நண்ணியே மணிப் பீடம்—உற்று
நாடினர் மன்னன் வேடம்—அந்த
நாத்திகர் செய்யார்ப் பாடம்—கண்டு
நங்கை யானவள் சங்கை மேயினள்
நாடுமோ தீயைக் கீடம். (67)

ஆன காலையில் வேந்தனு மிக
அயர்ந்திரு திறத் தாரை—எவர்
அகற்றுவார் பிணி வேரை—அவர்
அணிவரே சயத் தாரை—என
ஆணையே தரக் கூடினர் சம
ணாளரு மந்த வூரை. (68)

தீய பாதகர் கூடியே மன்னன்
தேகத்தி னிடப் பாக—முறு
தீச்சுரந் தணி வாக—மயிற்
சிறகினுற் றூட வேக—மிகச்
சீற லாயது மாறவே யிலை
செழியனே பட்டான் சோகம். (69)

ஆய காலையிற் பிள்ளையார் வலத்
தாகியே பொடி தூவ—உடன்
அப்புறங் குளிர் மேவ—சுரம்
அனைத்துமே யிடந் தாவ—மன்னன்
அயர்ந்து வாடினன் றொடர்ந்து பீலியா
லாருக ருடல் நீவ. (70)

அரசன் வேதனைத் துயரினாற் பிள்ளை
யாரையேகெஞ்சி நாட—அவர்
ஆக மேற்பொடி போட—உடன்
ஆறி யேசுரம் ஓட—மன்னன்
ஆரு கர்களை யேகு மென்னவே
அறைந்தனன் முகம் வாட. (71)

விரவி யோங்கிய சுரமு நீங்கிட
வேந்தனுங் களி யோங்கிச்—சிறு
வேதிய ரடி தாங்கிச்—சமண்
வெய்யரின் குழு நீங்கிப்—பண்டை
வேத மார்க்கமு நீதமாய்க் கொடு
மேயினா னுடல் வீங்கி. (72)

வெய்ய ராருக ருய்யு மாறினி
வேண்டியே யவர் கூடித்—துயர்
மேவியே முகம் வாடி—யினி
வென்றிடு முறை தேடிப்—பாண்டி
வேந்த னரிடம் சேர்ந்துமேயிவை வ
விளம்புவா ருள நாடி. (73)

எய்து வாரெமின் றுய்யதா முறை
யெழுதியே யழ லிட்டும்—கன
லெரித்திடா தறின் மட்டும்—அதை
யேற்றமா கக்கொள் ளட்டும்—என
இறைவ னார்முன மறைய லாயினர்
ஏங்கியே யிடி பட்டும். (74)

மன்ன ஞரிதைப் பிள்ளையா ரிடம்
வழுத்தவே யவ ரொப்பக்—கனல்
வளர்க்கவே யுடன் செப்ப —அரன்
வைப்பரோ முறை தப்ப—என
மாது பாகரை யோது மாமறை
மன்ன நாணைச்செறிப்ப. (75)

அன்னதிற் போக மார்த்த பூண்முலை
யாகிய கவி பார்த்தார்—அதை
ஆரழ றனிற் சேர்த்தார்—மன்னன்
ஐயமு மறத் தீர்த்தார்—ஏடும்
ஆணிப் பொன்னெனக் காணக் கண்டுடன்
அமணரோ வுடல் வேர்த்தார். (76)

---

(ஆறுமுக வடிவேலவனே கலி என்ற சந்தம்.)

தீய சமணருந் தீட்டிய வோலையைச்
செந்தழ லிற்போட—அவர்
திரும்புமுன் னேயது தீய்ந்தது கண்டுடன்
சிந்தை மிக வாட. (77)

ஆய விரண்டு முறையினிற் றோல்வி
யடைந்தன மேனு மெய்யா—எமக்
கன்பாக வேயினு மோர்முறை யேசெய
வாணையுந் தாருமையா. (78)

என்றவர் கூறிட மந்திரி யாரெதி
ரெய்தி யிவைசொல்வார்—சரி
யிம்முறை தன்னிலுந் தோற்றிடிற் சூளுற
வேதென வேபுகல்வார். (79)

வென்றிகொள் ளேமெனிற் கூர்கழு வேறியே
வீயுவ மேயாவி—என
வேதியர் தம்மிடம் போயிவை கூறினர்
வேந்த ரருள்மேவி. (80)

இன்னது கேட்டவ ராற்றிடும் வாதமும்
யாதென வேநீரில்—வரை.
யேடது தானெதி ரேறிடச் செய்தலே
யென்றனர் கணேரில். (81)

அன்னதே யாமெனில் வாருமென் றேபிள்ளை
யாரடைந் தார்வையை—வாழ்க
அந்தணர் வானவ ராதின மாங்கவி
யாக்கின தும்மெய்யே. (82)

பீடுறு மிக்கவி யார்திரு வேடதைப்
பிள்ளையார் நீர்போட—அது
பேசிய மெய்வழி யீதெனக் காட்டிப்
பிறங்கியெ திர்த்தோட. (83)

நாடினர் யாவரு மார்கலி யாமென
நாட்டின ராம்வாழி—அந்த
நாத்திக ரேடது நீர்வழி யேகியே
நண்ணிய தேயாழி. (84)

வேந்தனு மோங்குக வென்றுநம் பிள்ளையார்
விளம்பிய சீரானே—இந்த
மேதினி யுள்ளவர் காணவே வேந்தனை
விட்டது வெங்கூனே. (85)

நீந்திய வேடது தங்கிட வன்னியு
நேர்பதி கம்பாட—மந்த்ரி
நீர்க்கரை யோரமே வாம்பரி மேற்கொடு
நேடினர் தீங்கோட. (86)

மந்திரி யேடதை யேந்தியே சாமிமுன்
வைத்திட வேகண்டார்—அதை
வாங்கியே யாவருங் காண்டரக் காட்டினர்
மன்னர் களிகொண்டார். (87)

பந்திய தாய்க்கழு நாட்டியே தீயவெம்
பாதக ரையேற்றி—அவர்
பாண்டிய நாட்டினி லற்றிட வாக்கினர்
பாலரின் ருள்போற்றி. (88)

அங்குநம் சாமியு நாள்சில வுற்றன
ராண்டுபி தாமேலோர்—பிள்ளை
யன்பினுற் பிள்ளையைக் காணவே வந்தன
ரார்த்தனர் முந்நூலோர். (89)

சங்கர ஞருறை மற்றைய க்ஷேத்திரஞ்
சார்ந்தன ரேபாடி—பின்னர்
தங்குவா கீசரு மன்னரு முய்ந்திடச்
சற்குரு கொண்டாடி. (90)

ஆகம மார்க்கமே தீட்சையுஞ் செய்தன
ராசிரி யாராகி—வந்த
ஆரண வேதியர் தம்மொடு மேகினா
ஆண்ட சிவயோகி. (91)

சாகரம் போலடி யார்களும் பின்வரத்
தாண்டினர் நம்பாண்டி—வளம்
தான்மிகக் கொண்டிடுஞ் சோழநா டண்மினர்
தந்தையர் சொல்வேண்டி. (92)

---

(பூமி மேச்சிடு மண்ணுமலைக் கோர்துணை என்ற சந்தம்.)

பிள்ளையானவரு முள்ளிவாய்க் கரையைக் கூடினூர்
வெள்ளம் நாடினூர் கவி பாடினூர்—அந்தப்
பெருகு வெள்ளமீது படகு தள்ளியோடி யாடினூர். (93)

என்ன லானபுத்தன் சென்னி மீதிலிடி வீழ்த்தினர்
மதந் தாழ்த்தினர் சிவத் தாழ்த்தினர்—வாதில்
எதிர்க்க லானபுத்தர் சிவத்தைப்பேணவைத்து வாழ்த்தினர்.

அங்கு நீங்கியப்பர் தங்கு பூந்துருத்தி போயினர்
ஊரை மேயினர் களி யாயினர்—காழி
யடைய வேண்டிவந்தா ரமுதை வாங்கியுண்ட வாயினர். (95)

துங்க மார்ந்ததிருத் தொண்டை மண்டலமு நண்ணினர்
அனற் கண்ணினர்த் தொழ வெண்ணினர்—அங்கோர்
தொண்ட ரேகியிவை விண்டு மேயினருட் புண்ணினல். (96)

அத்த னரதுவா வைக்கலான பனை யேதுமே
யொரு போதுமே பலி யாதுமே—உற
அருகர் யாருநகை செயவு மாயினரென் னேதுமே. (97)

பத்தி யாகவிதைச் செப்ப லாகவவை காய்க்கவே
அர னுக்கவே இவர் கேட்கவே—உடன்
பனைக ளத்தனையுங் குலைகள் முற்றினவால் நோக்கவே (98)

ஒற்றி யூரைப்பினர் பற்ற லாகிச்செல வாங்குமே
புக ழோங்குமே யதன் பாங்குமே—உள்ள
ஒப்பி லாதமயி லைக்கு வாருமெனத் தாங்குமே. (99)

பெற்றி வாய்ந்தசிவ நேயச் செல்வரெனும் பேரினர்
முல்லைத் தாரினர் மிகச் சீரினர்—வந்த
பிள்ளை யாரையெதிர் கொள்ள லாகிமுனம் நேரினர். (100)

செட்டி யிருமுன மாற்ற லானதவச் சீரினல்
மிக வேரினள் திரு நேரினள்—தன்னைச்
சிறுமி யாகப்பெற்று முருக நாதர்க்காக்கு நாரினர். (101)

மட்டு வார்குழலி பத்தி யோடுதொடை செய்யவே
மலர் கொய்யவே செல வெய்யவே—நாகம்
வந்து தீண்டவவள் வெந்து மாண்டனளுள் னையவே. (102)

கண்டு தாதையவ ளென்பு யாவையுமே கூட்டினர்
குடத் திட்டினர் அணி பூட்டினர்—அதைக்
காழி வந்தகுரு நாதர் கண்டுகொளக் காட்டினர். (103)

கொண்ட நோக்கமதைப் பிள்ளை யாருமனத் துன்னினர்
அருள் மன்னினர் அவர் பொன்னினள்—உடல்
கூறு கொண்டகுடஞ் சேரு முன்றிலெனப் பன்னினர். (104)

(பொன்னுலவு சென்னிகுள என்ற சந்தம்.)

சொன்னபடி யன்னதையு மின்னுமுடிக் கோயிலெதிர்
தூக்கியதை வைக்கவவர் கண்டனர்—அந்தத்
தோகையுயிர் கொள்ளமனங் கொண்டனர்—வடி
சோறுமாதிய வீசனரடி நாளுமோதிடு வாருமேகொளச்
சுந்தரி யுதவிடாது போதியோ—எனத்
தந்தனர் பதிக மோதி வேதியோர். (105)

மின்னலொளி தன்னைநிகர் கன்னிகுட மன்னிவெளி
வேகமொடு வந்தடியில் வீழ்ந்தனள்—உடன்
வேதியரை வேட்டிடவே தாழ்ந்தனள்—அவர்
வீத லேயற வாவியானதை யீதலானவ ராதலாலது
மெத்தவும் பிழையதாகச் சொற்றனர்—இனும்
மற்றைய தலமுமேக லுற்றனர். (106)

ஆகுமந்த வேளைகண்டு தாதைவந்து காழிகொண்டே
யாளுடைய பிள்ளையாரைச் சேர்த்தனர்—ஒரு
அழகுடைய மாதையுமே பார்த்தனர்—அவர்
காசையேதுமி லானபோதிலும் வேதமோதிய நீதியானதை
யாற்றிட மனதிலெண்ணி யொப்பினர்—இந்த
மாற்றமு முலகிலெங்குஞ் செப்பினர். (107)

நாகமெங்குந் தேவர்வந்து கூடிநின்று வாழிதந்து
நாடியுறச் சேர்த்துவந்தார் யாரையு—மண
நாளி னன்று நண்ணினர்நல் லூரையும்—அங்கு
நாலுவேதமு மோதலாயிட வாகமேயிடு பூதியேகொடு
நன்குறவே வந்தடைந்தார் கந்தரும்—நம்பி
மங்கையொடு முற்றூர்மணப் பந்தரும். (108)

சின்னமுதல் மன்னுமொழி துன்னவவர் பொன்னொளிருஞ்
செய்யதிரு நாணையுமே பூட்டினர்—பினர்
தீவலமே வியுரை நாட்டினர்—இந்தத்
தீயவாழ்வினை யானுமே பெற நேரலாயது மாதுமேவரச்
சேருவன் சிவனின்றுமென் றோதினர்—உடன்
ஓருரை பகருந்தோடெய் காதினர். (109)

கன்னியொடு மின்னுமண மன்னினரும் துன்னியதிற்
கடுகியுற வாவெனவே நாட்டினர்—எதிர்
காணச்சிவ லோகமதைக் காட்டினர்—உடன்
காதலாகிய பாடலேசொலி யாருமேசிவ லோகமேவிடக்
காழியின் முதல்வர்செய்தார் வேண்டியே—சுரர்
வாழியும் பகரலானா ரீண்டியே. (110)

(மஞ்சுநிகர் குந்தள என்ற சந்தம்.)

சந்தவடி வேலவன் வாழி
தமிழ் மறையை யுதவி யருள்
சாமிநாத தேசிகர் வாழி—உமை
தந்தபாலைய ருந்தலாகிமுன் வந்தஞானசம் பந்தசாமியாஞ்
சற்குருநா ளிணைகள் வாழியே
தரணியுற்ற விருளகற்றும்
தம்பிரானும் வாழி வாழியே. (111)

விந்தநிகர் மாடமுஞ் சேர்ந்து
நிறை மதுரைப் பதி வளரும்
வேதியரின் மரமர பார்ந்து—வாழ்கோ
விந்தசாமிசொல் சிந்துமேதினி நின்றுலாவிட விந்துசூடியை
வேண்டிவமே வாழ்த்தி வாழியே
விருப்பமொடு பிழைபொறுத்து
மேன்மைபெறச் செய்வர் வாழியே. (112)

திருச்சிற்றம்பலம்.